**செய்தி வெளியீடு எண்:50** **நாள்:22.01.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (22.1.2021) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறைக்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தட்டச்சர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 197 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திருமதி பா. வளர்மதி, தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு.தீரஜ் குமார், இ.ஆ.ப., பள்ளிக் கல்வி ஆணையர் திரு. என். வெங்கடேஷ், இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**